ஸ்ரீ திரிபுரசுந்தரீசமேத ஸ்ரீ சந்திரமௌளீசுவராய நம:

# ஆர்ய தர்மம்.

தனிகன்:— தரித்திரனை நோக்கி, என் ஐய! வறுமையால் வருந்துகிறீர்?

தரித்திரன்:— தாங்கள் முப்பிறவியிற் செய்த பாக்கியத்தால் ஏராளமான தனத்தையடைந்தும் இப்பிறவியில் தானம் செய்யாமல் லோபித்தனத்தையடைந்திருப்பதுபோல் முப்பிறவியில் நான் அப்படியிருந்திருப்பேன், அதனாலிப்படி வருந்துகிறேன். இந்தப் பதவி தங்களுக்கடுத்த பிறவியில் நேரக்கூடும் இவ்வுண்மையையுணர்ந்து தானம் செய்வீராக. ஒருவரையும் ஏளனம் செய்யவேண்டாம்.

** ** ** ** ** **

தானம் செய்யாத தனிகனையும், தபஸ் செய்யாத தரித்திரனையும் கல்லைக் கழுத்தில் கட்டி கடலின் நடுவில் தள்ளிவிடவேண்டுமென தர்ம சாஸ்திர ஆணை. ஸேதுக்கரையில் அவ்விருவர்களும் ஓர் புண்யகாலத்திற் சேர்ந்தார்கள். க்ஷேத்திரவைபவத்தாலிருவர்களுக்கும் ஞானோதயமாகி, கல்லைக்கட்டிக் கடலில்விழ மணல்திட்டான இவ்விடத்தில் கல்லைக்காணோமேயென்று அவர்கள் சுற்றிப்பார்க்கையில் கல்லெதற்கு? நாமே கல்லாகத் தானிருக்கிறோம்: எனக்கு நீர் கல்லு, உமக்கு நான் கல்லு, இரண்டுபேருமாகக் கழுத்தைக்கட்டிக்கொண்டு நடுக்கடலில் விழுந்திடுவோமெனத் தீர்மானிக்கையில் உயிரிழந்தாலும் தானம், தவம் செய்வதில்லையென்ற பிடிவாதமேன்? இதைவிட நீங்களிருவரும் தானம், தவம் செய்வதாகத் துணிந்து செய்து ஆனந்தஸாகரத்தில் மூழ்குவீர்களாக என்று தார்மிகரது உபதேசத்தைக்கேட்டு அதன்படி நடந்து சிரேயஸ்ஸையடைந்தார்கள். அதுபோல் எல்லோரும் சிரேயஸ்ஸையடைவாராக.

*** *** *** ***

"பாத்திரமறிந்து தானம் செய்யவேண்டும், கோத்திரமறிந்து பெண்ணைக் கொடுக்கவேண்டும்" என்ற பழைய மொழிப்படி தானம் செய்வதையும் தக்க பாத்திரத்திற்றான் செய்யவேண்டும், பாபிகள் வருந்தி யாசித்தாலும் அவர்களிடம் தானம் செய்யக்கூடாது, பசியென்று பரிதாபங்காட்டிய ஓர் செம்படவனுக்கு ஓர் பிராமணன் ஒரு அணா காசைக்கொடுக்க அதைக் கொண்டு அவன் பசியைப் பரிஹரித்துக்கொள்ளாமல் தூண்டிமுள்வாங்கி மீன்களைப்பிடித்து வியாபாரம் செய்து தனிகனானன், பணத்திமிரால் பிராம்மணர்களை ஹிம்ஸிக்கத் தலையெடுத்தான். இதற்கெல்லாம் காரணம் அந்தப் பிராமணன் கொடுத்த ஒரு அணாவென்று கண்டு யமதர்மராஜன் அவ்வளவு பிராணிவதையாலேற்பட்ட பாபத்திற்காக அந்தப் பிராமணனையும் நரகயாதனையையனுபவிக்கச் செய்தாராம். ஆகவே தானம் கொடுப்பதானால் பாத்திரமறிந்து கொடுக்கவேண்டும். இதுபோலவே கோத்திரம் அறிந்தே பெண்ணைக் கொடுக்கவேண்டும். அப்படியில்லாமல் கண்டவனிடம் கொடுத்துவிட்டால் குலமே கெட்டுப்போய்விடும், பிறந்த ஸந்ததியும் சுத்தமாயிருக்காது, ஆஸுரத்தன்மையால் பிறரைப் பீடிப்பதாயுமாய் விடும். ஆகையால் தனதானத்தையும் கன்யாதானத்தையும் தகுந்தவிடத்திற் செய்து யாவரும் சிரேயஸ்ஸையடைவாராக. சுபம்.

பத்திராதிபர்.

# ஆர்ய தர்மம்.

## ஆத்தும குணங்கள்

### 4-சௌசம்.

சௌசமென்பது நான்காவது ஆத்தும குணமாம். அதன் சொரூபத்தை பிருஹஸ்பதிபகவான்—

अभक्ष्यपरिहारश्च संसर्ग श्चाप्यनिन्दितैः ।
स्वधर्मे च व्यवस्थानं शौचमेतत्प्रकीर्तितम् ॥

"புசிக்கத்தகாதவைகளைப் பரிஹரிப்பதும், எவ்விதத்திலும் நிந்தைக்குப் பாத்திரமாகாமல் புகழ்பெற்ற பெரியோரிடம் சேருவதும், ஸ்வதர்மத்திலேயே நிலைத்திருப்பதும் சௌசமெனப்படும்" என்று கூறியுள்ளார். பிராணிகளுக்குப்பெரிய சத்துருவாகப் பசியைப் பரமேசுவரன் படைத்துவிட்டாராகையால் பசியெடுத்தவன் நல்லது கெட்டது என்ற பகுத்தறிவில்லாமல் புசிக்கத்தகாதவைகளையும் புசிக்கத்துணிந்திடுவானென்று தற்காலத்தில் தேசாந்தரசஞ்சாரம் செய்பவர்களுக்குத் தெரிந்த விஷயம். அதைத் தின்று தற்காலம் பசியென்னும் பிணிநீங்கிவிட்டாலும், பின்னிட்டுப்பிசாசப் பிறவியிற் படுபசியால் படாதபாடெல்லாம் படுவதற்குக்காரணமான பாபத்தை உண்டாக்கிவிடும். அந்தக்கஷ்டத்தை அநுபவிப்பதைவிட தற்போதுள்ள பசியைப் பொறுத்துக் கொண்டு புசிக்கத்தகாதவைகளை விலக்குவதே நலம். அப்படிப் புசித்துவிட்டால் திருஷ்டமாகவே அந்தக்கரணத்தில் காமாதியான அசுத்தியுமுண்டாய்விடும், அந்த அசுத்திநேர்ந்துவிட்டால் இழிகுலத்தோருடனும் கூடவேண்டுமென்ற அவா உண்டாய்விடும். அதனாலிவன் கெடுவதுமின்றி குலமே கெட்டுவிடும். ஆகவே சுத்தியைக் கருதியவன் அதை விலக்குவதே நன்று. எவ்விதத்திலேனும் பாமரர்களாலும், பண்டிதர்களாலும், சாஸ்தி

ரங்களாலும் நிந்திக்கப்படுவோருடன் கூடுவது என்றைக்கும் கெடுதியையே விளைவிக்கும். அதனால் அவர்களோடு சேருவது நன்றன்று. ஆனால் ஒருவிதத்தாலேனும் நிந்தனைக்குள்ளாகாமலி ருக்கும் பெருமைவாய்ந்த பெரியோரிடம் பழகுவதே நன்று. பெரியோர் புண்ணியத்தை உபதேசிப்பார். பாபத்திற் புகவிடார். அதிகம் சொல்லுவானேன். ஸாது ஸமர்கமத்தால் கிடைக்காத சுபம் யாதுமில்லை. புருஷார்த்தமெல்லாம் கிடைப்பதுடன் முடி வில் மோக்ஷம் பெறுவதற்கும் காரணமாகுமென்று சாஸ்திரங்க ளில் கூறப்படுகின்றது. அது யுக்திக்கு மொத்ததே. ஸாதுஸமாக மம் நேர்ந்தால் அவர்கள் ஸ்வதர்மத்தையே நாடும்படி நல்லுபதே சம் செய்வார் இயற்கையாகவே பிராணிகளுக்கு உதிக்கும் பரதர் மருசியைத் தடுப்பார். அப்பொழுது ஸ்வதர்மத்திலேயே நிலைப் பான். ஸ்வதர்மத்திலேயே ருசியும், ஸ்வதர்மத்திலேயே நிலையு மேற்பட்டுவிட்டால் ஸர்வசிரேயஸ்ஸும் தானாகவே கிடைக்கும். ஸ்வதர்மத்தை அனுஷ்டித்தால் மனது சுத்தியடையும். மனது சுத்தமானால் காமக்குரோதாதிகள் விலகும். அவை விலகினால் சுப வாசனை வலுக்கும். அதன்வலிமையால் பெரியார் கண்ணுக்குப் புலப்படுவார். அவர்களைக் கண்டதும் வணங்கிடத்தோன்றிடும். அடிபணிந்து வணங்கி நிற்பவனுக்கு தத்துவத்தை உபதேசிப்பார் கள். தத்துவ உணர்ச்சியால் மனமொடுங்கும். வாஸனை ஒழி யும். தியானம் மேவிடும். தாரணை நிலைக்கும்- சமாதி கிடைக் கும். பிராசீன வினைகள் நசிக்கும். நிர்விகல்ப்ப ஸமாதிபலத்தா லும், அப்பியாஸவைராக்கியங்களின் அதிசயத்தாலும் பிராரப்த கர்மம்கூடத் துலைந்திடும். இங்கே ஜீவன் முக்தியும் கிடைக்கும். அவ்வளவு கிடைத்தவனுக்கு விதேஹ கைவல்யம் கைவசமாகவே யிருக்கும். இவ்வளவுக்கும் மூலகாரணமாயுள்ளது ஸ்வதர்மநிஷ் டை. ஆகவே இது சௌசமெனப்படுவது மிகப்பொருத்தமுடை யதே' ஆகையால் இத்தகைய உத்தம ஆத்துமகுணத்தையடை ந்து எல்லோரும் பாக்கியத்திற்குத்தக்கவாறு புருஷார்த்தங்களை அடைவார்களாக. சுபம்

பத்திராதிபர்.

# வைதிகவிநோத சம்பாஷணை.

(91-வது பக்கத்தொடர்ச்சி)

இனிமித்ரர்களும் பெரியோர்களும் ஏதடா இவன் இடையேபுகுந்து ஏதோபேசுகிறான்என்று மனவருத்தமுறாவிடில் நான் நிச்சயமாய்ச்சொல்வேன், நீங்களிருவரும்சொன்னதவ்வளவுபொருத்தமுடையதன்று. தாங்கள் சொன்னதெதுவும்பிரத்தியக்ஷாதி பிரமாணவிருத்தம். அவ்வளவுக்கும் விரோதம் சிறிதுமிராவழியாக நம்மாசிரியர் நற்சித்தாந்தம் காட்டி நம்மையாண்டார், பல நூலியற்றினர், பலவழி உபதேசித்தார், செய்யவேண்டியதைச் செய்தார், சித்தாந்தம் நிலைபெற்றது, இனி வேண்டுவது ஏதுமில்லை, எங்கட்கு ஆத்மவிசாரத்திற்கென எவரையும் எதிர்பார்க்கவேண்டாம், நீங்கள் ஏதாகிலும் சொல்லுங்கள், பிடிவாதமின்றி உங்களுக்கு நல்ல பாக்கியமிருந்தால் தத்வவிருப்பமுள்ள முன்வழியாகிய எம்மாசிரியர் கண்ட நல்வழியைக் கேட்பவர்க்கு உபதேசிக்கச்சித்தனாயிருக்கிறேன். எவர் வந்தாலும் வாக்கியார்த்தம் சொல்லி ஜயிக்கிறேன். இனி உங்கள் பாக்கியம் எப்படியோ? அறியேன்.

ஜப்:— (நகைத்து) அந்தோ! இது ஏது? கிணறுவெட்டப் பூதம் புறப்பட்டது. ஓ மித்திரா! இவன்யாவன்? சிறிதும் நியாயவாஸனையின்றி பிரத்தியக்ஷமாத்திரம் பிரமாணமென்று வேதங்களையும் முக்கியப்பிரமாணமாகக் கொள்ளாது புறம்பாய்வியவகரிக்கிறான், ஓ ஆனந்தராயசர்மா? கோபிக்கவேண்டாம், ஆக்கிரஹம் வேண்டாம் இப்பொழுது சாஸ்திரச்சண்டையேயன்றி சஸ்திரச்சண்டையல்லவே. நீர் காட்டினவாறு யாமும் பல வைதிகவசனங்களை எங்கள் மதத்திற்காதாரமாகக் காட்டினோமல்லவா? அவைகட்கு கதி ஏதுஞ் சொல்லாது மழைகாலத்துக் கார்கூட்டம் ஒலித்தவாறு வீணில் ஏன் சத்தம் போடுகிறீர்? கோபத்தை ஒருவாறு ஒழித்திடும். யான் ஒன்றும் பிரமாணவிருத்தமாகச் சொன்னேனில்லை, எமது புலன்களையெல்லாம் கூடி உங்கள் பெரியோர்கள் தேடிய பொருளை அபகரித்தில. கீதையின் ஆசிரியர் கண்ணன் உபதேசித்துவரும் வாக்கியத்தை ஏதுகாரணத்தால் நீர் அறிந்திலீர்.

तस्माच्छास्त्रं प्रमाणं ते कार्याकार्यव्यवस्थितौ ॥

"ஆகவே உனக்குக்காரியாகாரியவியவஸ்தையில்சாஸ்திரந்தான் பிரமாணம்,, என்றல்லவா பகவான் கூறினர். தமக்குப்பெயரோ பகவத்பக்தன் என்றிருக்கின்றது. அவ்வாறுபாகவதராயிருந்து பகவானிட்ட மரியாதையை ஏன் அதிலங்கனம் செய்கிறீர். நீர் கேட்டதற்கெல்லாம் ஸமாதானம் சொல்வேன். அவஸரப்பட வேண்டாம்.

ரங்:—ஐய! இங்கு இவர்கோபித்தது ஏதுமில்லை, ஆதலால் இவர் ஏதோ விதண்டையே பேசிவீண் கோபம்செய்ததாக நிச்சயிக்க வேண்டாம். ஆயினும் 'சப்தம், என்பது பிரத்தியக்ஷத்திலும் மேலானப் பிரமாணமாகாது என்றே எண்ணியிருந்தேன். நீங்கள் சொல்லுவதைக்கேட்டால் எனக்கும் சம்சயமாகத் தானிருக்கின்றது. எனக்கும் என்மதத்திலும் பக்ஷபாதம் சிறிதுமில்லை. ஆயினும் எவ்விஷயம் ஸப்பிரமாணமென்று எனக்குத்தோன்றுகின்றதோ அதை நம்புவேன்.

ஜப்:—ஓ! மித்திர!! உமதுநண்பர் நன்கு எடுத்துரைக்கட்டும். அத்துவைத சித்தாந்தத்தைச்சிதைத்திட எழுந்துபார்க்கட்டும். இவர்க்கு எம்மிருவர் மதமான சுத்தாத்வைத விசிஷ்டாத்து வைதங்கள் சம்மதமன்றெனப் புலப்படுகிறது. இவர் இதன் மேல் கோபிக்கினும் எமக்கும் ஏதும் கோபமில்லை. கோபத்தால் மாத்திரம் கக்ஷி ஜயித்துவிடாது. அஹம்பாவப் பேச்சாலும் கார்யமாகாது. எல்லாவற்றிகும் சமாதானம் சொல்லுவோம். பண்டிதர்காள்! நீங்களும் பிரமாணங்களுள் பிரத்தியக்ஷம் சிறந்ததென நம்புகிறீர்களல்லவா! ஆதலால் முதலில் அதைப் பற்றித்தெரிவிப்பாம். எவ்விதப்பிரமேயமும் பிரமாண ஸித்திக் கேற்ப ஏற்படுகின்றது. பிரமாண நிச்சயமன்றி வாதாடயத்த னித்தல் வாதிகளுக்கழகன்று. ஆகவேமுன் பிரமாண நிச்சயம் செய்து, பிரமேய விசாரத்திற்புகுவாம்.

ரங்:—இச்சமயம் எம்மிருவருக்குமொப்பமுடிந்த சித்தாந்தமான-பிரமாணங்களுக்குள் பிரத்தியக்ஷம் முதலும் முக்கியமுமென் பதையெடுத்து நிரூபிப்பேன். அதை நமது நண்பர் ஜப்பியேசு வரசர்மா சிரத்தையுடன் கேட்டு விடையளிக்குமாறும் நீர் மத்தி யஸ்தராயிருக்கும் பொருட்டும் கேட்டுக்கொள்ளுகிறேன்.

இவ்விஷயத்தில் இருவர் சொல்லவேண்டியதும் ஒன்றேயாத லால் அதைநானே, சொல்லுகிறேன் நீர் மத்தியஸ்தராய்நின்று உமது மனதிற்பட்டதை உண்மையாகவெளியிடும்.

ஆந.—சரி சரி எமது நண்பர் ஜப்பியேசுவரரும் ஒப்பினானல் நான் மத்தியஸ்தமாவதற்குத் தடையில்லை. விஷயமும் பிரமா ணங்களுக்குள் பிரத்தியக்ஷம் சிறந்ததென்பதே இருக்கட்டும்'

ஜப்:—ஓ பண்டிதர்காள்! யாமிப்பொழுதுவிதண்டாவாதத்திற்காக வந்தோமில்லை. உண்மையை அறியவேண்டியே இவ்விவாத லீலையை ஆரம்பித்தோமாதலால் ஆன்றோர் சம்பிரதாயத்தை அனுஸரித்து ஒருவன் வாதியெனவும், ஒருவன் மத்தியஸ்த னெனவுமிருக்கவேண்டியது அழகே. ஆகவே நண்பர் மத்தி யஸ்தம் செய்வதிலெமக்கேதுமாக்ஷேபமில்லை.

ஆந:—ஆயின் தொடங்கலாம். இங்கு விவாதவிஷயம் பிரமாணங் களுக்குள் பிரத்தியக்ஷம் சிறந்ததா! என்பது. இவ்விஷயத்தில் ஸாதகப்பிரமானத்தைச் சொல்லவேண்டியவர் நண்பர் ரங்க ராஜ சர்மா. மறுத்தற்குரிய விஷயங்களைச் சொல்லவேண்டிய வர் நண்பர் ஜப்யேசுவர சர்மா.

ரங்—நன்றெடுத்துக்காட்டினீர். உலகத்தில் ஒவ்வொருபிராணியும் இஃதிஃதெனப் புலன்களா(இந்திரியங்களா)லறிவதன்றி வேறி ல்லை. ஆயின் பிரத்தியக்ஷம் மற்ற எல்லா பிரமாணங்களுக்கும் முதல் பிரமாணமாகின்றது. பிரத்தியக்ஷத்தால்கண்ட இரு பொருள்களின் கார்ய காரணபாவம் முதலிய ஸம்பந்தங்களைத் தெரிந்துகொண்ட ஒருவன் பிரத்தியக்ஷமான கார்யத்தைக் கொண்டுமறைந்துகிடக்கும்காரணத்தையறிவதே அனுமானம். ஆதலின் அதுவும் பிரத்தியக்ஷத்தைப் பின்பற்றியே வருகின் றது. அங்ஙனம், பிரத்தியக்ஷமாய்க்கண்ட கோ முதலியவற் றின் அவயவங்கள் ஏகதேசமொத்திருப்பதைக்கண்டு இது கோ போலிருத்தலால் 'கவயம், (காட்டுப்பசு) என்றறிவது உப மானமாம். அதுவும் பிரத்தியக்ஷத்தையே தழுவுகின்றது. இவைபோல் சப்தப்பிரமாணமும். எப்படியெனில் கூறுவாம். ஓர் முதியோர் "குடத்தைக் கொண்டுவா" என உச்சரிக்க, அதைக்கேட்டு மற்றொருவன் கொண்டுவர, அப்பொழுது காதால் சப்தத்தைக்கேட்டும், கண்ணால் செய்ததைக்கண்டும்

பிறகே இச்சொல்லுக்கு இதே பொருளெனச் சிறுவன் நிச்சயித்துத் தாமறிந்தபொருளை மற்றவர் தெரிந்துகொள்ளும் பொருட்டு சொல்லுவதல்லவா சப்தப்பிரமாணம். ஆகவே இதுவும் முதியோன் சொல்லைக் கேழ்ப்பதையும், மற்றவன் செய்கையைப் பார்ப்பதையும் தழுவி அமைந்ததாகையால் அதுவும் பிரத்தியக்ஷத்திலமைந்ததே. ஆக எவ்லாப்பிரமாணங்களும் பிரத்தியக்ஷத்தையே தழுவி நிற்கின்றனவாதலால் அது சிறந்ததென்பதற்குத் தடையேது. ஆகவே பிரத்தியக்ஷம் வேறு பிரமாணங்களை விரும்பாமல் ஸ்வதந்திரப் பிரமாணமே. வேறு பிரமாணங்களை எதிர்பார்க்கும் மற்றையப் பிரமாணங்களிலும் ஸ்வதந்திரப் பிரமாணமாகிய இதுவே சிறக்குமென்க.

ஜப்:—நண்ப நன்கு கூறினுய். மத்தியஸ்தர் அனுமதிகொடுப்பின் இதற்குள்ள ஸமாதானங்களைச் சொல்வோம்.

ஆந:—ஆம் ஆம் ஆரம்பிக்கலாம்.

ஜப்:—பிரத்தியக்ஷம் பிரமாணமென்றதில் எமக்கேதுமாக்ஷேபணையில்லை. அது முதன்மைப் பெற்றதென்பதையும் யாம் மறுக்கவில்லை. மற்று—அது சிறந்தது என்பதைமட்டும் யாமொப்புவதில்லை. பிரத்தியக்ஷமென்பது ஐம்புலன்களுக்கும் விஷயங்களுக்கும் ஸம்பந்தம்நேர்ந்து மனத்துணையால் தோன்றுமோர் அறிவேயல்லவா! இவ்வறிவேயன்றோ வேறொன்றையும் விரும்பவில்லையென்றீர்.

ரங்.—ஆமாம்.

ஜப்:—இங்ஙனமாயின்—மலையென்னுமோர் பொருளில் கண் சம்பந்திக்க, ஓரேகாலத்தில் உச்சியிற் புல் நிறைந்ததுபோலும்-நடுவில்செடிகள் நிறைந்ததுபோலும், அடியில்மாங்கள் நிறைந்ததுபோலும் காணப்படுகின்றது. அதைக்காண்பவன் ஓர் ஸமயம் நடுவில் நிற்பானேயாயில் மேலும்-கிழும் செடிகளும், நடுவில் மாங்கள் நிறைந்ததாகவும் அவனுக்கு தோன்றுகிறது. அவன் உச்சியிலேறினுனேயானுல் முன்கண்டதற்கு நேர் மாறுகவே தோன்றுகிறது. சிறிதுதூரம்சென்றுலிம்மலை மண்மேடுபோலும் கொடிகள் நிறைந்ததுபோலும், சிலவிடத்துப்

புல்நிறைந்ததுபோலும், புகைபோலும் காண்கின்றது. உச்சியில் வஸிப்பவர்க்கு ஸமபூமியாகவும், கீழ்நின்று பார்ப்பவர்க்கு மேலும்கீழும் நீண்டவடிவமாகவும், சமீபத்தில் சென்றவனுக்கு மேடு-பள்ளம்-நீர்-நிலம்-முட்செடி காடுகள் நிறைந்த பலபாகங்களாகவும், சுற்றிவருபவனுக்குப்பல அமைப்புகளுள்ளதாகவும் காணப்படுகின்றது, அங்ஙனமே ஓர் குடத்தைப் பார்ப்பவனுக்கும் குடம் பலவிதமாகின்றது. எங்ஙனமெனில்-மேடான பிரதேசத்தினின்று கீழான இடத்தில் வைக்கப்பட்ட ஓர்குடத்தைப்பார்ப்பவனுக்கு அது நடுவெளியுள்ளதாகவும் வளைவுள்ளதாகவும், கீழ்ப்பட்டவிடத்திலிருந்து மேலிடத்திலுள்ள குடத்தைப் பார்ப்பவனுக்கு அடி அரை பாகம் பிண்டாகாரமாகவும் பக்கத்திலிருந்துகாண்பவனுக்குபக்கத்துஅரைபாகம்பிண்டாகாரமாகவும் காணப்படுகின்றது. ஆதலால்எங்கும் எதுவும் எவனுக்கும் பூர்ணமாகக் காணப்படுவதல்லை. ஆனால் எந்தெந்தகாலத்தில் எந்தெந்த அவயவங்களைக் காண்பானோ அவைகளையெல்லாம் மனதால் ஒருங்குசேர்த்து சிலவிடத்து நிச்சயம் காண்கிறான். மேலும் மலை முதலியவற்றின் உட்பொருளை அறியாதவனும் மலைமுழுதும்கண்டேனெனச்சொல்லுகிறான். நண்பரே! நீர் மலையைக் கண்டீரல்லவா? தூரத்திலிருந்த காலத்தில் அது விஷயத்தில் முதலில் கண்டகாலத்தில் உமது கண் உமக்குப்பிரமாணமா? இடையில் கண்டகாலத்தில் பிரமாணமா? கடத்தில் கண்டகாலத்தில் பிரமாணமா? இங்ஙனமே-மேற்புறத்திலிருந்து குடத்தைக்கண்ட காலத்தில் உமது கண்கள் பிரமாணமா? கீழ்புறத்திலிருந்து கண்டகாலத்தில் பிரமாணமா? பக்கத்திலிருந்து கண்டகாலத்தில் பிரமாணமா? நண்பரே! எப்பொருளையும் எக்காலத்தும் பூர்ணமாகக்காண எம்மாலியலவில்லை. உம்மால் முடியுமானால் அங்ஙனம் காண்பவிக்கவேணும் பார்ப்போம். இதுமட்டோ! ஸ்பரிசேந்திரியமும் சேர்ந்தவரை அப்பொருளின் சீதோஷ்ணாதிகளை யுணர்த்துமேயன்றி ஒரே முறையில் ஓர் பொருளின் பண்பையேனும் அமைப்பையேனும் முற்றிலுமுணர்த்தாது. இனி ஒரு பொருளை முற்றிலும் தொட்டு அதனாலுண்டாகும் அறிவுகளை ஒருங்கு சேர்த்தால்-இது உஷ்ணம் இது சீதம் என்றுமறிவு தோன்றும். அங்ஙனம் செவிப்புலனும் தூரத்திலிருந்த காலத்தில் ஏதோ கூச்சல் என்று தெரி

சற்று கிட்டவந்த காலத்து இது மானிடர் குரல் என அறிவிக்கின்றது. பின்னும் கிட்டினுல் தேவதத்தனிது சொல்லுகிறுன் யக்ஞதத்தனிது சொல்லுகிறுன் என்றுணர்த்துகின்றது. எதுவும் துணிபே (நிச்சயமே)யன்றி ஸம்சயமில்லே. ஏனெனில் மலேயையே கண்டேன்—குடத்தையேகண்டேன்—சீதத்தையேதொட்டேன்—உஷ்ணத்தையே தொட்டேன்—சப்தத்தையேகேட்டேன் என்பதாதியாகவல்லவா உணரப்படுகின்றது. பர்வதத்தைக்கண்ட காலத்தில் அவனது இந்திரியம் எல்லாவற்றையும் விசேஷாம்சங்களேயும் முற்றிலுமறியாதாதலாலும் அவையெல்லாவற்றையுமொன்றுகூட்டி அறிவதற்கு மனதை அந்தந்த இந்திரியமும் அபேக்ஷிப்பதாலும் அந்த தனித்தனி அறிவுகளே நிச்சயமென நினேக்க முடியாதாகையாலும் கண் முதலிய பிரத்தியக்ஷப் பிரமாணங்கள் வேறென்றையும் விரும்பாதென்றும் சுதந்தரமென்றும் எங்ஙனம் சொல்லமுடியும்? பக்ஷபாதமின்றி ஆலோசித்து இதன்மேல் பேசுவீராக-

ரங்:—ஐயா! நீர் கூறியகதை கண்ணுக்கும் செவிக்குமிருக்கலாம். மற்றையப் புலன்களும் அங்ஙனமோ; நீர் காட்டிய ஏதுக்களிலும் கூடப் பிரத்தியக்ஷம் தன்னினத்தைத் தழுவியதேயன்றி வேறு விஜாதியப் பிரமாணத்தை அனுஸரிக்கவில்லே. வேறு விஜாதீயப் பிரமாணங்களேத் தழுவுவதுதான் பிரமாணங்களுக்குக்குறையாகுமேயன்றி ஸஜாதீயமானப் பிரமாணத்தையபேக்ஷிப்பது குற்றமாகாது. ஆகப்பிரத்தியக்ஷமிருவிதம் "நல்ல மணமுடையது இந்த மலர்" என்பதாதி நாசிப்புலனுலமைந்த அறிவு சுதந்தரமாவதுபோல் சிலபிரத்தியக்ஷம் சுதந்திரம் 'இது மலே' 'இது நகாம்' என்பதாதிப் பிரத்தியக்ஷம் தன்னினம் தழுவி (ஸஜாதீயப் பிரமாணத்தையபேக்ஷித்து) நிற்கும்பாதந்திரப்ரத்யக்ஷம்.) ஆதலால்பிரத்தியக்ஷம்மற்றையப்பிரமாணங்களுள் சிறந்ததென்பதில் குறையொன்றுமில்லே. மேல் "எந்தவிடத்திலுள்ளகண் உமக்குப் பிரமாணம்" எனவோர் வினு நிகழ்த்தினீர்? அதன் விஷயத்தில் அனுபவத்திற்கேற்பக் கற்பிக்கத்தான் வேண்டியிருக்கிறது. ஆனல் அங்கும் ஸ்பரிசம் முதலிய பிரமாணங்களேக் கலந்துகொண்டு ஒருவாறு தீர்மானிக்கலாம். மனதின் அபேக்ஷை இருக்கிறதேயென்றுல்—மனமென்பது எல்லாப் பிரமாணங்களுக்கும் இன்றியமையாததாகவே அது சேர்வது ஓர் குற்றமாகாது.

ஜப்:—மித்திரா! நீர் கூறியபடி நிச்சயிக்கப்படுமேயாகில் நீர் கூறிய வாறு பிரத்தியக்ஷம் மிகச்சிறந்த பிரமாணமாகலாம். அன்பரே! சிறிதாலோசித்துப்பாரும். உலகத்தில் எந்த மனிதனும் எப்பொருளையும் காணவாவது தொடவாவது முடியுமா? மேலும் நீர் கூறியவாறு எவனாவது தான்கண்ட மலையைக் கண்டவாறுள்ளதோ, அன்றோ; என ஐயமுற்றுக் கையாற்றொட்டு அறிந்தவனுண்டா? அதுதான் சாத்தியமா? கண்டகுடத்தையாவது கையால்தொட்டு உண்மையறிந்தவனுலகத்திலுண்டோ? நன்று கூறினீர். நண்பரே! நீர் வருங்காலத்தில் உம்மை முன்புறத்திற்றான் கண்டேன், பின்புறங்காணவில்லை. அதுபோல் அதோ அங்கே நடக்கும் நங்கை உடைகளால் சிலபாகம் மறைந்தும், ஆபரணங்களால் சிலபாகம் புலப்படாமலுமிருப்படியால் அவளைப்புலப்பட்டவரை சில அங்கங்களோடுதான் கண்டேன். ஆயினும் "உம்மைக்கண்டேன்--அந்நங்கையைப் பார்த்தேன்" என்னும் அறிவுண்டாகின்றது. ஆங்கு உம்மையான் தொட்டேனா; அல்லது அந்நங்கையைத்தான் தொட்டேனா! தொடத்தான் கூடுமா? அன்றியும் ஒருவாறு உம்மைத் தொட்டுப்பார்த்து அறிந்தேனாயினும் உமது உட்புறத்திலிருக்கும் குடல் முதலியவற்றை எவ்வாறு அறியக்கூடும். அவையின்றிவெளிப்புறமுள்ள மற்றவைமட்டோ உமது சரீரம்? அவையெல்லாம் அனுமானத்தாலேனும், சப்தத்தாலேனும் உணரவேண்டியவையேயன்றி பிரத்தியக்ஷ ஸஜாதீயத்தால் யாவருமெளிதில் தெரிந்துக்கொள்ளகூடியவையல்ல. அவ்விடத்து "யாம் உம்மைக்கண்டேன்" என்னும் பிரத்தியக்ஷம் எங்ஙனம் விஜாதீயப் பிரமாணத்தைத்தழுவாது நிற்கும். அனுமானம், சப்தம் இவை பிரத்தியக்ஷ ஸஜாதீயமல்லவே. இப்படியிருக்கையில் பிரத்தியக்ஷம் தன்னினத்தை மாத்திரம் தழுவி நிற்கின்றதென்பது எப்படி? நன்றாய் ஆலோசித்துப்பாரும்.

ரங்:—(சிறிது நேரம் மனதில் ஆலோசிக்கின்றார்.) இங்ஙனமிருக்க நமது பூர்வாசார்யர்கள் பிரத்தியக்ஷமே சிறந்ததென எங்ஙனம் அமைத்தனர். புத்திமான்களான பௌத்தசார்வாகாதிகளும் எங்ஙனமொப்பினர். இதற்குச்சமாதானம் ஆலோசித்துத்தான் கூறவேண்டும். ஆலோசிக்காமல் கூறற்பாலதன்று. எமதாசிரியன் எம்மை ஓதுவிக்குங்கால் "சங்காமதத்தவர் சர்வக்ஞனெ

ன்ற அபிமானத்தால் எவனையும் திருஷ்டாந்தங்களால் வஞ்சித்துவிடுவார்கள்" என்றார் ஆதலாற் சிறிதாலோசிக்கவேண்டும் என்று ஆலோசித்துவிட்டு நண்பரே! நீர் கூறிய விஷயத்தை மனதில் வாங்கினேம், ஆலோசனை செய்துபார்த்து "இவை கொள்ளத்தக்கவை-இவை தள்ளத்தக்கவை'எனச்சொல்வோம்

ஜப்:—நியாயமிது. எதிலும் நடுவுநிலைமை கொண்டு ஆலோசித்தாலல்லவோ உண்மை புலப்படும். அவ்விதமேயாகட்டும்.

ஆந.—இருக்கட்டும் இதுவரை உங்களுக்கு ஒருகோடி முடிந்ததல்லவா? அதுவரை நானும் விஷயங்களையாலோசிக்கிறேன்.

ரங்:—யாம் வாதவிநோதத்திலேயே காலம் போனதையும் கவனிக்கவில்லை.மத்தியான ஸமயம் வந்துவிட்டது, இனி மாத்தியான்ஹிகானுஷ்டானம்-பூஜை-வைசுவதேவம் முதலிய கார்யங்களை நடத்தவேண்டியிருப்பதாலிந்தக் கதையை இதோடு இப்பொழுது நிறுத்திக்கொண்டு இன்று ஸாயங்காலத்தில் இதேவிடத்தில் பாக்கிவிவாதங்களைப் பேசிக்கொள்வோம். உங்களுக்குமிஷ்டமானால் செய்வோம். என்றதைக்கேட்டு மற்றவர்களுமப்படியே சம்மதிக்க எல்லோரும் கிரஹமேகினர்கள்.

(பிறகு எல்லோரும் ஸங்கேதம் செய்துகொண்டபடி ஸாயங்காலத்தில் காவேரீ தீரத்திற் சேர்ந்தார்கள். மேல் ஆனந்தராய சர்மாவென்பவர் கதையை உபக்கிரமம் செய்தார்)

ஆந:—ஐய! ரங்கராஜ சர்மா! ஜப்யேசுவர சர்மா!! நாமேற்படுத்திக்கொண்ட விசாரத்தைத்தொடங்கலாமல்லவா? இன்றுநான் மத்தியானத்தில் உண்டிகழித்தேனுயினும் என்மனம் இவ்விஷயத்திற்றானே இருந்தமையால் அருந்தின அன்னமும் அருந்தினதாகத்தோன்றவில்லை. நமதுநண்பர் ஜப்யேசுவாசர்மாஎடுத்து உதாகரித்த ஸித்தாந்தத்தில் மனம் படிந்திருக்கிறது. அதன் விசாரத்தைத் தொடங்கவேண்டும்.

काव्य शास्त्रविनोदेन कालो गच्छति धीमताम् ।

"காவ்ய சாஸ்திர விசாரவிநோதத்தாலல்லவோ அறிவாளிகளுக்குக் காலம் செல்லுகின்றது" என அறிஞர் கூறுகின்றார். அதனால் மேல் விசாரம் நடக்கட்டும்.

ரங்:—ஓ! ஜப்யேசுவாசர்மா! உம்மதத்தில் பிரத்தியக்ஷப்பிரமாணம் அவ்வளவு முக்கியப் பிரமாணமாக இல்லாமையால் இவ்வுலக விவகாரம் எவ்விதம் முடியும்?

ஜப்:— யான் என்ன செய்வேன்? யானும் நல்லநூல்களைக் கல்லாதவரையில் இவ்விதமே எண்ணியிருந்தேன். அந்தக் காலத்தில்— ஏதடா! நம்முன்னோர்கள் பிரத்தியக்ஷத்தில் காணப்படுவனவைகளை நம்பாமல் சப்தத்தால் மாத்திரம் ஏற்பட்டுள்ள பொருள்களை நம்புகிறார்களே" என மனவருத்தமுற்றேன். இங்ஙனம் சிலகாலம் செல்ல, என் தகப்பனாரிடம் வேதாந்தம் படிக்க அனேகர் வந்து கூடினார்கள். அவர்களைக்கண்டு நான் பரிகசித்துச் சொன்னதாவது— "பண்டிதர்காள்! எனக்கு வேதாந்தம் சிறிதும் பிடிப்பதில்லை. பிரத்தியக்ஷாதிகளுக்கு விரோதமில்லாத தர்க்கம் முதலிய சாஸ்திரங்களே சாஸ்திரங்கள். அவைகளைத்தான் இதற்கு மேலும் நான் அப்பியசிக்கப் போகிறேன்" என்று. அவர்கள் என்னிடமிரக்கத்தைக்காட்டி "அப்பனே! கோபிக்காதே. உலகத்தின் உண்மையை விசாரித்துப்பார். விசாரித்தாலன்றோ உண்மை புலப்படும். நீ குழந்தையாயிருக்குங்காலத்தில் ஆடைகள் கட்டாமல் திரிந்தாய். அது உனக்கு வெறுப்பையும் வெட்கத்தையும் உண்டாக்கவில்லை. இப்பொழுது அப்படித்திரிவாயா? அப்படித்திரிந்தால் அதனால் வருங்கெடுதி இன்னதென உனக்குத் தெரிந்துவிட்டபடியால் இனி அவ்வாறு திரியமாட்டாய். "அனேகர் அங்ஙனம் செய்வதால் நானும் அவ்வாறு செய்கிறேன்" என்பாயானால் உனது குழந்தைப்பருவத்தில் அவர்கள் ஆடை உடுத்திருப்பதை நீ அறிந்ததில்லையா? அப்பொழுது உனக்கேன் அதில் சிரத்தையுண்டாகவில்லை. அவிவேகத்தாலென்பாயானால், சப்த பிரமாணத்தில் சிரத்தையில்லாமையும் அவ்விதமே எனக்கொள். இக்கதை ஓர் புறமிருக்கட்டும். உலகத்தில் பெரும்பான்மையில் சரீரமே ஆன்மாவென நினைத்து வியவகரிக்கும் ஜனங்கள் அனந்தமன்றோ. அவர்கள்விசாரிக்காமல் ஜன்மத்தை ஒழித்துவிட்டால் அவர்கள் ஜன்மம் அவிவேகஜன்மமாகவே ஒழிந்திடுமல்லவா! உண்மையை விசாரிக்கவேணுமென்று அவாக்கொண்டவனும்உலக வியவகாரங்களிலீடுபட்டுஆத்துமானாத்தும விவேகத்தையும் உபயோகப்படுத்துவதில்லையே. இதனால்— நீ பிரமாண

மெனக்குறித்த தர்க்கம் முதலியசாஸ்திரங்களில் சரீரம் வேறு ஆன்மா வேறு எனக்குறித்திருக்கின்றதல்லவா— அது பொய் யாமோ? ஆதலின் என்னப்பனே! உண்மை விசாரித்து உசித மான வழியில் நடப்பாயாக. சிறிதும் விசாரிக்காமல் பெரியோர் கொண்ட சித்தாந்தத்தை அஸத்தெனஒதுக்கிவிடாதே'' என்று உபதேசித்து என்னை என் தகப்பனரிடம் அழைத்துக்கொண்டு போய் இக்கதையையும் சொன்னர்கள். அதன்மேல் என் தகப் பனர் கருணையால் எனக்குத் தத்துவோபதேசம் செய்யக்கருதி வினவிடையாகப் பல விஷயங்களை உபதேசித்தனர். ஓ ரங்க ராஜசர்மா! ஓ ஆனந்தராயசர்மா! நண்பர்காள்! அக்கதையை கேட்பதுஉங்களுக்கு காலக்கேடாக நினைப்பீர்களானல் அதை விட்டுவேறு விஷயத்தைத் தொடுவோம்.

ரங்:— நீர் கூறியது யுக்தம். ஆயினும் எனக்குமட்டில் அக்கதை யைக்கேட்பதில் விசேஷ திருப்தியிருக்கின்றது. அக்கதையில் கேட்பவராகிய நீர் தார்க்கிகனும் விதண்டாவாதியுமாயினும், உமக்கு உபதேசிக்கும் பிதா வேதாந்தியும், புத்திரனுக்குஹிதத் தையே உபதேசிக்க வேண்டுமென்ற கருத்துடையவருமாயிரு ப்பது பற்றி அக்கதையைக் கேட்டால் எங்களுக்கு அனேக சம்சயங்கள் நிவர்த்தியாகும்.

ஜப்:- நண்ப! ஆனந்தராயசர்மா! அக்கதையை ஆரம்பிக்கலாமா?

ஆந:— அப்படியே ஆகட்டுமே.

ஜப்:— இதுதான் என் தகப்பனருக்கும், பிள்ளையாகிய எனக்கும் நடந்த விவாதம்—

தகப்பன்:— அடே! நீ யார்?

புத்திரன்.— யான் ஜப்யேசுவரசர்மா.

தகப்பன்:— உனக்குப் பெயரிட்டவர் யார்?

புத்திரன்:— தாங்கள்தான்!

தகப்பன்:— யானிட்ட பெயரால்தான நீஉன்னை வழங்கிக்கொள் கிறய்.

புத்திரன்— ஆம். அதிற் சம்சயம் என்ன.

தகப்பன்.— அடா! நீ குழந்தையாயிருக்குங்கால் நானிட்ட பெ யரை நீ எவ்விதம் கண்டாய்? இப்பொழுது நடந்துகொண்டி ருக்கும் ஒருமாம்ஸபிண்டத்தைக்கண்டு அதைவிரலால் சுட்டிக்

காட்டி 'இது குதிரை' 'இது பாம்பெனக் குறிப்பேனுகில், 'இது கொள்ளத் தக்கது, 'இது தள்ளத்தக்கது' 'இது சாந்தமாயது' 'இதுகடுமையானது' என இப்பொழுது தெரிந்துகொள்ளுகிறு யல்லவா? அது போல் அச்சமயத்தில் அதாவதுஉனக்குப் பெய ரிடுங்காலத்தில் நானிட்ட பெயரைத் தெரிந்துகொண்டாயா ?

புத்திரன்:— தெரிந்து கொண்டிருப்பேனே! என்னவோ! இப் பொழுது அது ஞாபகத்திலில்லை. அது பூர்ணமாய் மனதிற்பதி ந்திராது. அதனல் நினைவு வரவில்லை.

தகப்பனர்:— அட பண்டிதம்மன்ய! அச்சமயத்து அனுபவித்த ஒன்றையும் அறியாமல் நீ இது ஒன்றுக்கு மட்டும் காரணம் சொல்லவந்தாய். உன்னைப்போன்ற எவனுவது குழந்தைப் பரு வத்தில் நடந்ததை நினைக்கிறனு? நினைக்கப்போகின்றனு? 'நினைப்பான்' என நீ சாதிப்பாயானுல் மூத்திரம் நிறைந்தபடுக் கையும், மலங்கலந்த சோறும், தாயால்மட்டில் அனுமானம்செய் யத்தக்கரோகங்களும், அச்சமயத்தில் நேர்ந்தனவே: அவைநினை க்க முடியுமா? மேலும் வெறுக்கத்தக்கவாறு உடையின்றி யும், மேடுபள்ளமென அறிவில்லாமலும், மனிதர் மாடென்று அறிவின்றியும், திரிந்ததை நினைப்பானுயின் அவனுக்குச்சோறு வேண்டுமோ.

புத்திரன்:— அதனுற்றன் பகவானவைகளை மீண்டும் நினையாத நிலைமையில் வைத்துவிட்டார்.

தகப்பனர்:- அடா பிரௌடம்மன்யனுய்ச்சொல்லுகின்றய். ஆரோ ஒருவன் பகவானென்றுயே! அவனை பிரத்யக்ஷத்தாலேயே அறிந்துவிட்டாயோ! என்ன பிரட்தியக்ஷம்ப்பா! அது. பிரத் யக்ஷந்தானே உங்களுக்குச் சிறந்த பிரமாணம்.

புத்திரன்:— எல்லோரும் சொல்லுகிறர்களேயென்று அந்த வாச னையால் சொல்லிவிட்டேன் இந்தக்கதை இருக்கட்டும். குழந் தைப் பருவத்தை இப்பொழுது நினைத்தாலென்ன? நினையா விட்டால் என்ன?

தகப்பனர்:—நீ அதை அறியாமலும் நினையாலும்இருப்பாயானுல் நீஇன்னபெயருள்ளவனென்றும், இன்னவம்சத்திற்பிறந்தவன் என்றும் இன்னசொத்துக்குரியவனென்றும்எவ்விதமேற்படும்.

புத்திரன்:—தாங்களும் அடிக்கடி 'குழந்தாய் ஜப்யேசுவரா' என்று அழைப்பதுகொண்டே நீங்கள் பெற்றோர்களென்றும்,நான் புத்திரன்என்றும்ஜப்யேசுவசர்மாவென்றும்தெரிந்துகொண்டேன்

தகப்பனார்:— நன்கு கூறினாய்! அவாது வியவகாரமட்டுமா உன்னை இன்னான் மகன் என்றும்இன்ன பெயருள்ளானென்றும்விளக்கியது.

புத்திரன்:— அவர்கள் வியவஹாரமும். மற்றவர்களின் வியவஹாரமும் கூடத்தான்.

தகப்பனார்:— அடாகுழந்தாய் இது பிரத்யக்ஷமில்லை. எவரோ சொன்னதுமட்டும் தானே அது சப்தமாத்திரந்தானே ?

புத்திரன்:— ஆம்

தகப்பனார்:— அப்படியானால் பிரத்யட்சத்திற்ககப்படாமல் சப்தமாத்திரத்தாலறியக் கூடிய விஷயமுண்டுபோலிருக்கிறதே.

புத்திரன்:— சிறிதுண்டு.

தக:—அதென்னடா சிறிதென்கிறாய். பிறப்பவனெல்லாம் ராக்ஷஸனா? அவனாகில் பிறந்தபொழுதே தாய்க்குச்சமமாவான், அதனாலெல்லாவற்றையுமறிவான். அதுபோலெல்லோருமாவானா? அல்லது எவனேனும் மரம்,மட்டைகள்போல் தாய் தகப்பனில்லாமற் பிறந்தானா? உலகத்திலெல்லோருமல்லவோ "இவன் இன்னான் மகன், இன்னபெயருள்ளவன்" என்று வழங்கப்படுகிறார்கள். ஆகவே ஒவ்வொருவனும் முதலில் தெரிந்துகொள்வது சப்தப்பிரமாணமேயாகின்றது. பிறகு எப்பொருளை எப்பிரமாணத்தாலறியினும் சப்தத்தை நினைத்தறிகிறானேயன்றி வேறெவ்விதப் பிரமாணத்தாலுமறிவதில்லை. ஆகவே சப்தப்பிரமாணத்தாலறியக்கூடியவையே அதிகம்.

புத்:—(சிறிதாலோசித்து) இதுவரை சரிதான். எங்கும் சப்தமே பிரமாணமா?

தக:— அடா! பிரத்தியக்ஷம் முதலிய பிரமாணங்களுக்கெட்டாத உண்மைப்பொருளில் சப்தந்தான் பிரமாணம்.

புத்:— இவ்விரு பிரமாணங்களும் ஒன்றையொன்று அபேக்ஷிக்காமல் நிற்குமா?

தக:— அதை விசாரிக்க உனக்கிஷ்டமிருந்தால் சாஸ்திரங்களைப் படிக்கவேண்டும். அது நிற்கட்டும். இவ்வளவால் பிரத்திய க்ஷாதிகளுக்கெட்டாதவிஷயத்தில் சப்தமே பிரமாணமென்பது ஏற்பட்டதல்லவா? இன்னென்று கேட்கிறேன்— என் புத்திர னென்றும், ஜப்யேச்வரனெனப் பெயருடையதென்றும், எனக் குத் தெரியுமென்றும் நீ வியவகரித்தாயே. ஆங்கு'நான்'என்ற பொருளெது? இந்தப்பெயரெதற்கு?

புத்:— நானென்பது இச்சரீரந்தான். அதற்குத்தான் அந்தப் பெயர்.

தக:— நான் என்பது சரீரமானல் 'நான் அறிவேன்' என்றெவ்வி தம் சொன்னய்? அது ஜடமாயிற்றே ஜடம் எப்படியறியும். ஆகவே நானெனப்படுவது சரீரத்தைவிட வேருயுள்ளதே. அதை விளக்கும் பிரமாணம் சப்தமேயன்றி வேறில்லை. அன்றி யும் இப்பொழுதுள்ள சரீரத்தை என் புத்திரனென்று எப்படி சொல்லக்கூடும்? இவ்வளவு பெரிய சரீரம் தாய்வயிற்றிலேயே இருந்ததா? என்னுடைய ஹிருதயத்திற்றனிருந்ததா? இதற்கா நான் பெயரிட்டது? தொட்டிலிற்கிடந்த சாணளவு சரீரத்திற் கல்லவோ நான் அந்தப்பெயரிட்டேன், இதுவே அது ஆகுமா?

புத்:— ஸரிதான் தங்கள் சரீரத்தில் பிந்துவடிவமாய் நின்ற இச் சரீரமே மாதாவின் வயிற்றிற்சென்று பெருத்து வெளிவந்து மீண்டும் உட்கொள்ளும் பொருள்களின் பரிணமத்தால் அச் சரீரமே இவ்வாறு பெருத்தது. அதுவும் இதுவும் சிறிதும் பெரிதுமாய் மாறிவெவ்வேருனுலும் நானென்னும்ஆன்மஅறிவு இவைகளில் தொடர்ந்துவருவதாலும் அமைப்பின் வேறுபாடு இல்லாமையாலும் அதுவே இதுவென வியவகரிக்கப்படுகிறது.

தக.— ஆகவே சரீரம் வேறு, ஆன்மா வேறு என்றதை நீயே உணர்ந்தாய். அறிவுவடிவனன ஆன்மா சரீரமாகாது. ஆன் மாவோ இறப்பதுமில்லை, பிறப்பதுமில்லை. அவன் நித்தி யன். விபு. அப்படி உண்மையிருக்கையில் வியவகாரத்தில் மட் டும் சரீரத்தையுமான்மாவையுமொன்றுபடுத்தியான் பெருத்த வன், இளைத்தவன், குள்ளன், கருப்பன், கூனன், குருடன், நிற்கின்றேன் நடக்கிறேன் தாண்டுகிறேன் எனவும் யான் அறி

வேன் எனவும் வழங்குகிறார்கள். அன்றியும் சரீரத்தை சில ஸமயம் நான் என்றும்--சிலசமயம் என்னுடையதென்றும் வழங்குவதுமுண்டு. சரீராத்மாக்களை ஒன்று படுத்தியும் வேறு படுத்தியும் வியவகரிக்கிறார்கள். இந்த வியவகாரத்திற்கு விவேகம் காரணமா? அவிவேகம் காரணமா?

புத்:—முற்கூறியதன்று அவிவேகம்தான் காரணம்.

தக:—இப்படி அவிவேகியாயிருந்து சப்தம் சிறந்த பிரமாணமில்லை. வேதாந்தம் சரியான சாஸ்திரமில்லை. என்பதாதி என்னென்னவோ சொல்லத்துணிந்துவிட்டாயே. உண்மை சொல்லுகிறேன். சாதாரணமாய்க்கேள் (தொடரும்)

நாராயணன்

---

# ஆ ஹா ர நி ய ம ம்.

(முன் பக்கத்தொடர்ச்சி)

எவனொருவன் பிராணாக்கினிஹோத்திரத்தின் ரஹஸ்யத்தை சுருதியிற் கூறியவாறு அறிந்து செய்கிறானோ அவன் செய்யும் பிராணாகுதியானது எல்லாவுலகங்களிலும் எல்லா பிராணிகளிடத்திலும் ஸகல ஆத்மாக்களிடத்திலும் ஹோமம்செய்யப்பட்டதாய் கொண்டு ஸர்வ பூதாந்தராத்மாவான பகவானை திருப்தி செய்து வைப்பதுடன் இந்த ரஹஸ்யார்த்தம் அறிந்து பிராணாஹுதிசெய்கிறவனுடைய ஸகலபாபங்களும் அனலிவிட்ட பஞ்சுபோல் பொசுங்கி விடுகின்றன. ஆகையினால்,

हृदि ध्यायन् हरिं तस्मै निवेद्यान्नं समाहितः ।
मध्यमानामिकांगुष्टैः जुहुयादाहुतीः क्रमात् ।

பிராணாஹுதி செய்வதற்கு முன் மனஸ்ஸில் பகவானைத்யானித்து இலையிலிருக்கும் அன்னத்தை सर्वस्यचाहं हृदि सन्निविष्टः ॥ எல்லோருடையஹிருதயத்திலும் நானிருக்கிறேனென்றுபகவான்

---

பிழைதிருத்தம்:—சென்ற ஸஞ்சிகையில் 'வைதீகவிநோத சம்பாகூஷணே' பத்திராதிபர் காலத்தில் போட்டதை நாராயணன் என்னும் மாணவன் எழுதியதாகக்கொள்ளவேண்டும்.

திறையில் சொல்லிய ஹிருதயமத்யவர்த்தியான அந்தப் பகவானுக்கு நிவேதனம் செய்து ஜாக்கிரதையுள்ளவனுப் பெருவிரல் நடுவிரல் மோதிரவிரல் இவைகளால் ஐந்து ஆஹுதிகளை அவர்களுக்கு உபதேசக்கிரமமாய் வந்த மந்திரங்களை பிரணவபூர்வகமாய் சொல்லி அவஸரப்படாமலும் முதலாகுதிக்கும் இரண்டாவதாகுதிக்கும் ஜாடராக்னியில் போய் சேறுவதற்கு முன் ஸம்பந்தம் ஏற்படாமலிருக்கும்படியாகவும்

कुर्यात् प्राणाहुतीरन्तर्निगिरेन्नतु चर्वयेत् ।
जिह्वयैव ग्रसेदन्नं दशनैस्तु न संस्पृशेत् ॥

பிராணாஹுதி அன்னத்தை விழுங்கிவிடவேண்டும். பற்களால் கடிக்கக் கூடாது என்றபடி பற்களால் கடிக்காமலும்,

यथा रसं न जानाति जिह्वा प्राणाहुतौ द्विजः ।
तथा समाहितः कुर्यात्प्राणाहुतिमतन्द्रितः ॥

என்றபடி நாக்கிற்கு ருசி தெரியாமலும் செய்யவேண்டும். பிறகு பசி தீருவதற்காக சாப்பிடுகையில்,

कबळे कबळे चैवकुर्याद्गोविन्दकीर्तनम् ।
नान्यदेवेरणं विष्णु सदाध्यायेच्चकीर्तयेत् ॥

ஒவ்வொரு கபளத்திலும் பகவந்நாமத்தை ஸ்மரித்தும் உச்சரித்துக் கொண்டும் புஜித்துடன்,

भक्तप्रमाणं पिण्डांश्च ग्रसेदेकैकशः पुनः ।
वक्त्राधिकस्तु यः पिण्डस्सआत्मोच्छिष्ट उच्यते ॥
पिण्डामशिष्टमन्यच्च वक्त्रान्निस्सृतमेवच ।
अभोज्यं तद्विजानीयात् भुक्त्वा चान्द्रायणं चरेत् ॥

எடுக்கும் கபளத்தை வாய்கொள்ளுமாறு போட்டுக்கொள்ள வேண்டும். வாயில் போட்டு மிகுந்ததை உண்டால் தன் எச்சிலைத் தானே உண்டதாகும். முகத்திலிருந்து சிந்தியதையும் ஒரு கபளத்தில் பாதியைப் புஜித்து பாதியை மறுபடி இலையில்போட்டு அதை மறுபடி எடுத்துப் புஜித்தாலும் சாந்திராயணப் பிராயச்சித்தம் செய்துகொள்ளவேணும். ஆகையால் எடுக்கும்கபளத்தை

यावद्ग्रासं सन्नयन् अस्कन्दयन्नश्नीत ।

ழில் சிந்தாமலிருக்கும்படி பிடித்து முழுகபளத்தையும் வாயில் போட்டு புஜிக்கவேண்டும்.

सदा चात्यशनं नाद्यान्नाति हीनं च कर्हिचित् ।
यथाऽन्नेन व्यथा न स्यात् तथा भुंजीत नित्यशः ॥

ஆஹாரத்தை அதிகமாய் புஜித்தால் ஜீர்ணமாகிறதற்கு சிரமம் ஏற்படுவதுடன் கை கால் முதலிய அங்களுக்கும் சிரமம் உண்டாகி மேல் செய்யவேண்டிய வேலைகளிலும் புத்திஸரியாய் பிரவேசிக்காமல் வெகு நாழிகை வரையில் கஷ்டமுண்டாகும் என்பது அவரவர்களுக்கு அநுபவத்திற் தெரிந்திருக்கலாம். அதிகமாய் புஜிப்பவர்களுக்கு நாளடைவில் அங்கங்கள் தளர்ந்து நரம்புகளுக்கும் முறுக்குக்குறைந்துவிடும். இதுமூலமாய் ஆயுளும்குறையும்அனேக வியாதிகளும் உண்டாகும். ஆயுர்வேதத்தில் சொல்லியபடி இன்னும் எவ்வளவோ கெடுதல் நேரிடும். ஆகையால் அதியானஆஹாரம் சாப்பிடுவது உசிதமல்ல. அதற்காகவெகு குறைச்சலாய்புஜித்தால் சரீரத்தில் சக்தியே இருக்காது. எவ்வளவு உணவை உட்கொண்டால் சரீரத்திற்குஉபத்திரவம்நேரிடாமலிருக்குமோ அதை அறிந்து அதற்குத் தக்கபடி மிதமான ஆஹாரத்தைப் புஜிக்கவேணும். மிதமாக ஆஹாரம் செய்பவர்களுக்கு,

गुणास्तु षण्डितभुक्तं भजन्ते आरोग्यमायुः प्रतिभा बलं च ।
अनाविलं चास्य भवेदपत्यं न चैनमत्याश इति क्षिपन्ति ॥

என்கிறபடி ஆரோக்கியம் தீர்காயுசு, தெளிவான புத்தி சரீரபலம் இவைகள் உண்டாவதுடன் அவர்களுக்குபிறகு குழந்தைகளும் நல்ல பலம் முதலியவைகளுடனிருக்கும். உலகத்தோரும் இம் மனிதனை அதிகமாய் புஜிப்பவன் என்று நிந்திக்கமாட்டார்கள். ஆகையால் மிதாஹாரமே தர்மசாஸ்திரத்தினுலும் வைத்திய சாஸ்திரத்தினுலும் ஒப்புக்கொள்ளப்பட்டது. இனி போஜன மத்தியில் நேரிடும் தாஹத்தை சமிப்பிப்பதற்கு ஜலபானம் செய்யவேண்டிய விஷயத்தில் வலது கையானது போஜன காரியத்தில் வியாபரித்திருப்பதால் இடது கையினுல் தீர்த்தபானம் செய்யும்படியாக நோம்

(தொடரும்)

வே. ஸ்ரீநிவாஸதாதாசாரியார்

# எட்டியாபுரம், ஸ்ரீராம பஜனைமடம்.

இந்த ஊரில் பெருமாள் கோவில் தெருவில் ஓர் பஜனைமடம் ஏற்பட்டு சுமார் 15 வருஷகாலமாக ஈசுவர ஆராதனம் நடைபெற்று வருகின்றது. அதில் சகலதேவதைகளுடைய படங்களும் நன்றாய் அலங்கரித்துவைக்கப்பட்டிருக்கின்றன. சனிக்கிழமை, ஏகாதசி முதலான தினங்களில் பாகவத சம்பிரதாயப்பிரகாரம் பஜனைகளை நடத்தி முடிவில் அர்ச்சனம் முதலான ஆராதனங்களைச்செய்து பிரசாதங்களும் விநியோகம் செய்யப்படுகின்றன. ஸ்ரீராமநவமி, ராதாகல்யாணம் ஸ்ரீஜயந்தி முதலான விசேஷ உற்சவங்களும் அந்தந்த ஸமயங்களில் சிறப்பாய் நடைபெற்று வருகின்றன. அந்த மடத்தில் தற்காலம் கும்பகோணம் ஸ்ரீஜகத்குரு சங்கரபகவத்பாதாளுடைய ஸ்ரீமடத்திலிருந்தும் இங்கு விஜயம் செய்திருக்கிற ஷைமடம் ஆஸ்தானவித்வான் மகோபதேசக கவிரத்னம் பிரம்மஸ்ரீ ப. பஞ்சாபகேசசாஸ்திரிகளவர்கள் கிராமவாசிகளான மகாஜனங்கள் கேட்டுக்கொண்டதை அங்கீகரித்துப் "பக்தி" என்கிற விஷயத்தைப் பற்றி இரண்டு தினங்கள் உபந்நியாசங்கள் செய்தார்கள். ஒவ்வொரு தினமும் இரவு 8½ மணிக்கு துவக்கி 11-மணிவரை நடக்கும். ஸகல ஜனங்களும் உபந்யசிக்கும் விஷயங்களைச் சிரமமில்லாமல் சுலபமாய் அறிந்துகொண்டு ஆனந்தப்படும்படி இலகுவான தமிழ்நடைகளால் இடையிடையே சாஸ்திரப்பிரமாணத்தில்வசனங்களையுமாதாரமாக எடுத்துக்காட்டி சிரவணம் செய்வோர்களுடைய மனதை பக்தி ரசத்தை நன்கு முழுகும்படி செய்தார்கள். முதல்நாள் உபந்நியாசத்தில் பக்தி பதத்தின் பொருள் அதை அனுஷ்டிக்கக் கூடிய அதிகாரிகள் அதின் பிரிவுகளில் சிலபாகமும் வெளியிடப்பட்டன. மறுநாள் ப்ராசீனராயும் மிகச்சிறந்த பண்டிதராயும் விளங்கின. ஓர் மகானால் கூறப்பட்ட பக்தியின் பிரிவைத் தெரிவிக்கும் ஒரு செய்யுளை எடுத்துக்கொண்டு விஸ்தாரமாக ஒருமணிவரையில் அதிலுள்ள விசேஷ அர்த்தங்களை நிரூபித்து முடிவில் தமக்கு ஏதாவது ஒரு தேவதையிடம் பக்தியிருப்பதைக்கொண்டு இதர தேவதைகளை நிந்திக்கக்கூடாதென்றும், அவ்விதம் நிந்திப்பவர்கள் கொடிய நரகத்திற்கு இரையாகிறார்களென்றும் தகுந்த மேற்கோள்களு

டன் போதித்து ஸபையிலுள்ளோர்களுக்கு அதிகசந்தோஷத்தை உண்டுபண்ணி உபந்நியாஸத்வத பூர்த்தி செய்தார்கள். இவ்விதம் நம்தேசத்திலுள்ள பண்டிதர்கள் ஆங்காங்கு நம் ஸநாதன தர்மங்களை உபதேசிக்க கிருபைகொண்டு முன்வருவார்களாகில் இக்கலியின் கொடுமைச் செயல்கள்யாவும் கடலில் அழிந்துவிடுமென்பதில் சந்தேகமேயில்லை. ஆகையால் பண்டிதர்கள் யாவரும் முன்வந்து தர்ம உபதேசங்களை செய்யவேண்டுமென்று நானும் பல வந்தனங்களுடன் வேண்டுகிறேன்.

காரியதரிசி,
ஸ்ரீராமபஜனமடம், எட்டியாபுரம்.

---

# புத்தகவர-மதிப்புரை.

## ஸ்ரீ சாரங்கபாணிஸ்தவம்.

"ஸ்ரீ சாரங்கபாணிஸ்தவம்" என்ற ஸ்தோத்திரத்தனம் கும்பகோண க்ஷேத்திரத்தில் திவ்வியமங்கள விக்ரஹத்துடன் விளங்கும் ஸ்ரீ சாரங்கபாணிஸ்வாமி விஷயமாக கும்பகோணம் அய்யங்கார் தெருவிலிருக்கும் வித்துவன்மணி ஸ்ரீஉப-வே வே. ஸ்ரீநிவாச தாதாசாரியஸ்வாமிகளால் பக்தஜனங்களுக்கு பரமோபகாரமாகும்படி செய்யப்பட்டு அவர்களாலே அச்சிலிட்டு எல்லோருக்கும் எளிதில் கிடைக்குமாறு பிரசுரிக்கப்பட்டது. இக்க ஸ்தோத்திரம் செய்வதின் காரணமும், அச்சிலிட்டு வெளியிடவேண்டிய காரணமும், எல்லோரும் இதைப்பார்க்கவேண்டிய ஆவச்யகதையும் அதை ஆக்கியோனாலே முகவுரையில் வரையப்பட்டது. இந்த ஸ்தோத்திரம் படிக்கப்படிக்க ஸம்ஸ்கிருதபாஷையில் ருசியுள்ளவர்களுக்கு மேன்மேலும் உற்சாகத்தை ஊட்டுகின்றதென்பது படித்தவர்களுக்குத்தெரியும். அம்மட்டோடில்லை. மூன்று சதகமாகவும் 16-பிரகாணங்களாகவும் வகுக்கப்பட்ட இந்த ஸ்தோத்திரம் மேலுக்குமேல் ஆராவமுதன் திருவடிகளில் அன்பர்களின் மனம் அழுந்தும்படி செய்கின்றதென்பது இரண்டொரு சுலோகங்களைப்படிப்பதிலிருந்தே பிரகாசமாய் விளங்கும். பக்த ஜனங்களின் சௌகரியத்திற்காகவே ஸ்வல்பக்ரயமே வைக்கப்பட்டிருக்கிறது. வேண்டியவர்கள் ஸ்ரீ கோமளாம்பா அச்சுக்கூடத்தில் எழுதிப் பெறலாம்.

---

# ஸுப்ரம்மண்யாஷ்டபதி.

"ஸுப்ரமண்யாஷ்டபதீ" என்ற ஸ்ரீ கீதகாங்கேய காவ்யம், காரைக்காத்தான் நகரில் வசிக்கும் பிரம்மஸ்ரீ K R.. விசுவநாத சாஸ்திரிகள் அவர்களாலியற்றுபட்டு அச்சிட்டு எமக்கனுப்பப் பட்டது. முருகக்கடவுள் மீது முதிர்ந்த பக்திவாய்ந்த மூதறிஞர் கட்கு முக்கியோபகாரமாயுள்ளது. ஸ்ரீகீதகோவிந்தகாவ்யமென்ற ஸ்ரீ கிருஷ்ணாஷ்டபதி கர்த்தாவான ஸ்ரீஜயதேவஸ்வாமி அஷ்டபதீ யை இயற்றும் தருணத்திலேயேஸ்ரீ கண்ணபிரானைக்காணபாக்யம் பெற்ற பத்மாவதீ என்னும் பார்யாளோடு இல்லறத்திலமர்ந்து மஹானுப் விளங்கியது யாவருமறிந்ததே. அம்மஹானது திரு வாக்கின் திறமையை இக்காவியமும் பெற்றிருப்பது பார்த்தவுட னே புலப்படும். ஸ்ரீ காங்கேயனெனப்படும் ஸ்ரீ கார்த்திகேயக் கடவுளின் மீது மனதைச் செலுத்த இதோர் முக்யசாதனமென் பதில் கிஞ்சித்தேனும் சம்சயமில்லை. ஆகையால் முருகன் முக் கிய பக்தர்கள். இதை வாங்கி கானரஸத்தையும், பக்திரஸத்தை யும் ஸம்பூர்ணமாய் அனுபவிப்பார்களாக. புத்தகம் ஆக்கியோ னிடம் கிடைக்கும். விலை அணா நான்கே. ரூ. 0—4—0

பத்திராதிபர்.

---

# வாரவிருத்தாந்தம்

எப்போ தொலையும்:—கோரும் சாரதாவும் சட்டசபையிலு ள்ளவரை மதாபிமானிகள் கவலையற்று கர்மானுஷ்டானம் செய்ய முடியாததுபோலிருக்கிறது. 17உ இந்திய சட்டசபையில் இவ் விரு மூர்த்தியும் இரண்டு சட்டங்களுக்கு அநுமதி பெற்றனர். 15-வயதுக்கள் பெண்களுக்கு நிஷேகமானல் சிக்ஷை. விதவைகளு க்கு சொத்துறிமைவேண்டும் என்பவைகளாம். இவைகளால் வரும் துன்பம் கொஞ்சமல்ல. நாமிவைகளையகற்ற மதவிஷய மான சட்டங்கள் கொண்டுவரக்கூடாது. அவச்யமான விஷயங்க ளில்அதை அனுஷ்டிப்போரில் மூன்றுபங்கு. மனிதர்விரும்பினலல் லது அதைக்கொண்டுவரக்கூடாதென ஓர் சட்டமியற்றவேண் டும். எச்சமயத்தில் இன்னும் எவ்விதமான சட்டம் கொண்டுவரு வரோ? யாறறிவர்? எப்போ துலையுமிந்த துன்பம்?

ஜாக்கிரதையாயிருத்தல் நலம்:—17உ பாண்டிச்சேரியில் கடற்கரை காத்துவாங்க ஓர் பிராம்மண தம்பதிசென்றது. சில வெள்ளைச் சிறுவர்கள் அந்த ஸ்திரீயின் மேல் விழ்ந்து மற்றுமிரு பெண்களையும் அவமானப்படுத்தினர். சட்டப்படி விவஹாரம் செய்து அவைகளைச் சிக்ஷிக்கவேண்டும். ஆயினும் காலம் கலியாதலால் அவச்யமான ரெயல் கோவில் முதலியவிடங்களியேயே மாதர்கள் ஜாக்கிரதையாகபோகவேண்டியிருக்கிறது. அநாவச்யமான பீச், டிராமா, சினிமா முதலிய விடம் செல்வோர் இதை நிறுத்தவேண்டும் அல்லது முற்றிலும் நவநாகரீகத்திற்கு தயாராயிருக்கவேண்டும்.

மாலையிடல்:—விவாஹத்தில் ஆண் பெண்ணுக்கும் பெண் ஆணுக்கும் மாலையிடக் கண்டிருக்கிறோம். மற்ற விசேஷங்களில் ஆண் ஆணுக்கும் பெண் பெண்ணுக்கும் மாலையிடல் உசிதமாம். தேசாபிமானம் என்ற காரணத்தால் ஸ்திரீகள் அன்யபுருஷனுக்கு மாலையிடுவது அநுசிதமன்றோ? சில நாட்களாக இவ்வநாசாரம் நம் நாட்டில் பரவிவருகிறது. தேசியத்தை விரும்பும் தலைவர் இவ் வன்னியதேச வழக்கத்தை மறுக்கவில்லை. பெண் வைத்யர், பெண் போலீஸ், பெண் நீதிபதி முதலியவர்கள் பெண்களுக்கு வேண்டுமென்பவர்களும் இவர்களே! தன் பதிக்கே ஏற்றதான பேச்சுஸ்பர்சம் ஒரே வாஹனத்தில் உட்கார்ந்து போதல் மாலையிடல் முதலியவைகள் பரபுருஷனுடன் நேர்ந்தால் பாதிவிருத்யத்திற்கு பங்கத்தை விளைவிக்காதோ? பாதி வ்ருத்யமென்பது பாரத நாட்டிற்கே வேர்போன்ற பெருந்தர்மம் எனவும் அதற்காகத்தான் ஸநாதன தர்மிகள் விவாஹ சட்டத்தை எதிர்த்துப்போராடுகின்றனர் எனவும் தேசாபிமானிகள் உணரவேண்டும். ஸ்வதர்மத்தைக்கொடுப்பதே தேசியமானல் அத்தகைய தேசியம் நமக்கு வேண்டாம். வேண்டாம்!

நல்ல தர்மம்:—பல ஆலயங்கள் ஜீர்ணமாகிவரும் இத்தருணத்தில் ஆலயம் வேதம் இவைகளில் பக்திகொண்டு சில ஆண்டுகளாக அதை ஸம்ரக்ஷித்துவந்த தனிகர் சித்தவிருத்திமாறிவரும் போது காஞ்சி வரதனது புண்யகோடி விமானமென்ற மூலஸ்தானத்தை ஏராளமான பணம் செலவழித்து கல்கத்தா வியாபாரி

க்கு மங்னிராம் ராம்குமார் பங்கூர் ஸகோதார்கள் ஜீர்ணோத்தாரணம் செய்தனர். மாசிமீ 11உ கும்பாபிஷேகம் நடந்தது. புதிய கோவில்கள் கட்டாவிடினும் கட்டியகோவில்களையாவது ஸம்ரக்ஷிப்பது நம் தர்மமாகும். ஸர்வஜன ஸம்மதமான இது மிக நல்ல தர்மமன்றோ? பக்தர்கள்வாழ்க.

போதாது போதாது. சாரதா சட்டத்தைக் கண்டித்து ராஜா பகதூர் பில்லை ஆமோதித்து பல விடங்களில் கூட்டம் கூடி பலனளிக்கவேண்டுமென்பது அவர் கோறிக்கை. ஆர்யதர்மம் வரும் ஊர்களிலாவது கூட்டம் கூடவேண்டும். திருவிடமருதூரில் சென்றவாரம் ஸபை நடந்தது. ஒவ்வோர் ஊரிலும் ஸபைக்கூட்டி ஆதரிக்கவும்.

"ஆசாரசீர்திருத்தத்திற்கில்லை அரசாங்கம்" இப்பொன்மொழி கொச்சி அரசாங்கத்தின் முகத்திலிருந்து தோன்றியது. ஈழுவர் ஜாதியைச் சார்ந்த ஓர் சட்டசபை அங்கத்தினர் பொதுக்கிணறுகளும் ரஸ்தாக்களும் அந்தியஜர்களுக்கும் உறியன- அதை உபயோகப்படுத்தியதற்காக அவர்களைச் சிக்ஷிக்கக் கூடாதென ஓர் தீர்மானங்கொண்டுவந்தார். அவர்களுக்கு வேண்டுமானால் தனியாக கிணர்வெட்டுகிறோம், பண்டைய ஆசாரங்களை மாற்றி ஒரு சிலர் விரும்பும் சீர்திருத்தம் செய்யவா அரசாங்கமிருக்கிறதென ஓர் சவுக்கடிகொடுத்தார் ஏனையோருக்கிது உறைக்குமோ?

'அன்னமயம் மநஸ்" அன்னம்போலவே மநமிருக்கும். ஆதலால் சுத்த உணவை உண்டு நன்மைபெற நம்முபநிஷத் உத்கோஷிக்க இந்த தத்வம் இப்போதுதான் மேனாட்டில் கண்டுபிடிக்கப் படுகிறது. டாக்டர் ஜே. ஸி. தேமார்க்கே என்ற பிராஞ்சுதேச ஆசிரியர் ஷை ஊசியை இந்தியக் கொல்லம்பட்டரையில் விற்கிறார். நம் நாட்டுவழக்கத்தைவிட்டு மேனாட்டில் மோஹங்கொண்டோருக்கு இது ஆச்சரியமே.

பெஷாவரில் ஸநாதனதர்ம ஸபை ஸ்ரீயுத கோஸ்வாமிகணேசதாதா பெருமுயற்சியால் ஏப்ரல் 3உமுதல் 3.நாள் ஷை ஸபை நடக்கும்.

ஸ்ரீவத்ஸ வே. சோமதேவ சர்மா.